செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம்: நள ஞு ஆவணி மீ ச - உ வெள்ளிக்கிழமை (20-8-1976) [இல: உ0

# சைவத் தியாகிகள் பீடம் அமைத்தல் - போதகர் பயிற்சிக் கல்லூரி நிறுவுதல்

## யாழ் நாவலர் மண்டபத்தில் 4-9-76 - கருத்தரங்கு

(அழைப்பாளர் திரு. வே. கதிரவேலு கிளிநொச்சி குருகுல நிருவாகி)

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்தோறும் வித்தியாசாலை தாபித்தலும், சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டு கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயரும், சைவப் பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறா முயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும், சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும், சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்"

இக்கூற்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் ஆழ்ந்த அறிவுத்திட்டம் உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட வருத்தத்துக்குரிய குமுறலுமாகும். இக் குமுறல் 120 வருடங்களுக்கு முன் அவரிடமிருந்து விழுந்த முத்துக்கள் ஆயின் இதே குமுறலுக்கு இன்னமும் விடிவு காணவில்லை இது இப்படியிருக்கச் சைவசமூக - தமிழ்ச் சமூகத்தினரிடையே ஏற்பட்டுள்ள இன்னும் பல பிரச்சனை புதிய பூதமாய்க் கிழம்பித் தலைவிரித்தாடுகின்றது இவற்றுக்கு விடிவுகாணாது அப்படியப்படியே விட்டுச் செல்வது தானா நம் பிற்சந்ததியார்க்கு முதுசொம். என்னே நாமிருநிலை,

இருந்தும் இலைமறைகாய் போலச்சில அறநிலையங்கள், ஆதுலர் சாலைகள் முதியோர் நிலயங்கள், மடங்கள், ஆதீனங்கள் தோன்றியுள்ளன. ஓரளவு நன்மைதான். ஆயினும் இவைகளும் கவனிப்பாரற்று தொடர்ந்து நடாத்துவதற்குக் கூடத் தொண்டர்களற்றுத் திண்டாடுவதைக் கண்டு நாம் கவலையடையாமல் இருப்பதற்கில்லையே இவைபோன்ற அறநிலையங்களையும் தேவத்தானங்களையும் நடாத்த அடுத்த சமயிகள் மத்தியில் தொண்டர்கள் பெருகிக்கொண்டிருக்க, நம்மவருள் ஒரு நிலையான, கட்டுக்கோப்புக்குளமைந்த சலதியாகிகளைக்கூடக் காணவில்லையே, இதுதானா நாம் காணக்கூடிய பெருந்தகைமை.

படித்தவர்களும், பட்டதாரிகளும், புரோகிதர்களும், சந்நியாசிகளும், பிரபுக்களும், பிறரும்கூட அதிகமதிகமாயிருந்தும் தியாகிகளைத் தோற்றுவிக்கும் தாபனம் உருவாக்கப்படவில்லையே, கிறீத்தவர்களின் செமினறி போன்ற ஒரு சைவ குருபீடம் அறிஞர்கள், ஞானிகள், தியாகிகள் கருமயோகிகள் நிறைந்தவகையில - இவர்களைத் தோற்றுவிக்கும் வகையில் அகில இலங்கை ரீதியிலாவது இதுவரை தோன்றவில்லையே. இப்படியொரு நமக்கென்றுரிய தாபனம் உருவாக்கப்பட்டு, போதிய வசதிகள் நிறைந்ததாய் எல்லாராலும் மதிக்கப்படக் கூடியதாய் இதுவரை நிறுவப்படவில்லையே. அங்கொன்று இங்கொன்றுக்ச் சில தாபனங்கள் தொடங்கப்பட்டுச் சிதறுண்டு கிடப்பதன்றிச் சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டாய் விளங்க ஒரு புதிய, ஆனால் பழைமை தழுவிய, பண்பாட்டின் உறைவிடம் தோன்றவில்லையே. நம் தாய் நாட்டில் ஸ்ரீ அரவிந்தர் போன்ற பெரியார்கள் போட்ட வித்து பெரிய ஆலவிருட்சமாய் வளர்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா இந்திய யாத்திரைக்குச் செல்பவர்கள் இப்படியான பல புரட்சிகரமான தாபனங்களையும் பார்வையிட்டுக் கருத்துக்கு விருந்து பெறவேண்டாமா? இந்திய நாட்டில் கோவில்களும், மடங்களும், உயர்ந்த ஞானிகளும் கருத்துப் புரட்சி செய்யும் செயல் வீரர்களும் இருப்பது மாத்திரமன்றி. சமூக மறுமலர்ச்சிக்குக் காரணமான பல புரட்சி நிறுவனங்கள் வளர்ந்துகொண்டிருப்பதை நேரில் பார்வையிடலாம். அவற்றைப் பார்வையிடுவதால் நம் கருத்துக்கு நல்ல போஷாக்குக் கிடைக்கும்.

(வளர்ச்சி ௩-ஆம் பக்கம்)

## நல்லூரானிடம் பஜனை யாத்திரை

### நயினையிலிருந்து

திங்கட்கிழமை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஆரம்பமாகி நல்லூர்த் தேர் விழாவன்று பஜனைப் பாதயாத்திரை நல்லூர் சென்றடையும்.

### ஏழாலையிலிருந்து

ஏழாலை இலந்தைகட்டி வயிரவர் கோயிலிலிருந்து பஜனைக்குழு ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் தலைமையில் திங்கள் இரவு இரண்டு மணிக்காரம்பமாகி மறுநாட்காலை நல்லூரையடைந்து தேர்த் திருவிழாவைத் தரிசனம் செய்யும்.

x x x

## பழம் பிள்ளையார்கோயிற் பெருந் திருவிழாக்கள்

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிற்பெருந்திருவிழாக்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை நண்பகல் கொடியேற்ற நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து சிறப்புற நடைபெறுகின்றன. செவ்வாய்க்கிழமை நண்பகல் சுவாமி தேருலாவுக்குப் புறப்பட்டு விழா மூன்று மணியளவிற் பூர்த்தியாகும். அன்று தேர்ப்பவனிக்கு "அரிமர்த்தன பாண்டியன்" யானை முன்னணியிற் செல்லும் காட்சி நிகழும். புதன்கிழமை பகல் 11 மணிக்குத் தீர்த்தவிழா நிகழும்.

## சிவானந்த குருகுலத்துக்கு நில உபயம்

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் சிவானந்த குருகுலமென்னும் சைவக் குருமார் பயிற்சச்சாலையில் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, சென்ற 24-ம் திகதி யாழ்ப்பாணம் கடையிற்சாமி கோயில் வீதியில் உள்ள நடேசர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

கலாநிதி கைலாசநாதக்குருக்கள் தமது தலைமைப் பேருரையில் 'இரண்டாண்டு காலத்துள் துரிதமான முன்னேற்றம் அடைந்த குருகுலத்திற்கு அமைதியான சூழ்நிலையில் சொந்தமாக ஓர் நிலம், இவ் விழா நடக்கும் இடத்தில் திரு சுப்பிரமணியம் செட்டியாரால் வழங்கப்பட்டிருப்பது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். முறைப்படி குருகுலம் வாழச் செய்து மாணவர்கள் ஒழுக்கம் கல்வி செயல் முறைப் பயிற்சி ஆகியவற்றில் சிறந்து விளங்கக் கூடியதாகக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு சைவாபிமானிகளில் ஆதரவு அவசியம்" என்று குறிப்பிட்டார்.

விசேட விருந்தினராக விழாவில் பங்குபற்றிய கலாச்சார அமைச்சுச் செயலாளர் சுசந்திபால அவர்கள், "இந்து சமயம் மிகப்புராதனமானது அரசாங்கம் பௌத்தசமய அபிவிருத்திக்காகச் செயற்படும் அதேவேளையில் இந்துசமய அபிவிருத்திக்கும் உதவி வந்துள்ளது. பௌத்த

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## தெல்லி. துர்க்காதேவிப் பெருந் திருவிழாக்கள்

வருகிற வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றமும் ஞாயிற்றுக்கிழமை (5-9-76) முற்பகல் 9 மணிக்கு தேரிலே தேவி எழுந்தருளுதலும் திங்கட்கிழமை முற் பகல் 11 மணிக்கு தீர்த்த விழாவும் நிகழ இருக்கின்றன.

தினமும் இரவு 7-30 மணிக்கு சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்யப்பெற்றிருக்கின்றன.

TAMIL COPY BOOK

தமிழ் எழுத்துறுப்புப் புத்தகம்

உங்கள் குழந்தைகளின் எழுத்துக்கள் உறுப்பாகவும் அழகாகவும் அமையவேண்டுமா? அதற்கு பயிற்சி அளிக்கின்றது தமிழ் எழுத்துறுப்புப் புத்தகம். புத்தகம் ஒன்று முதல் ஆறு வரை விற்பனைக்கு உண்டு.

விலை ரூபா 1-25

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு,

விபரங்களுக்கு:

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர்தீர்கவே:
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹு ஆவணி மீ ௪-௨ வெள்ளி

## சொற்பெருக்குமட்டும் துணை செய்யுமா?

மனம், வாக்கு, காயம் என்ற இம் மூன்றும் ஒருவழி நின்று கரும்ம் ஆற்றப்படின் நினைவு கை கூடும்; நனி பயன் விளையும். பரமேசுவர மகா விதாலயத்துக்குச் சின்னச் சுலோகம் அமைத்த வள்ளல் இராமநாதப் பெருந்தகை 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்ற கருத்தை ஆசிரியர்கள் மாணக்கர்களின் உள்ளங்களில் ஊன்ற வைத்தனர்.

சொல்லும் செயலும் ஒல்லும் வகையாய் ஒருங்கமைதலைச் சான்றோர் உரைகள் மிக விளக்குகின்றன. சிவ தீக்கை பெறுவதை உபதேசம் கேட்டல் என்று கருத்துறக் கூறுவர், சமயியாக வரும் அடியார் தாம் கேட்ட மந்திரச் சொற்பெருக்கை அநுட்டானத்தில் அமைக்கவேண்டியது விதியாகும். ஆகவே இவ்வளவு காலமாகச் சரமாரியாகப் பொழியப்பெற்ற சொற்கள் எவ்வளவுக்குச் செயலுணர்ச்சியைத் தூண்டிச் சற்கருமத்தைப் பெருக்கியிருக்கின்றன என்று அடிக்கடி எம்முள் ஆராய்வது விரும்பத் தக்கது.

ஐம்பெரும் ஆகாச் செயல்களை அடியோடு அகற்ற வேண்டும் என்று சொற்பொழியும் விற்பன்னர்கள் எடுத்துரையாத நிகழ்ச்சி இருக்கமாட்டாது. ஆனல் கொலையும் களவும் புலையும் மதுவும் குறைந்த பாடில்லை, கூடிக் கொண்டே வருகின்றன; மாபாதகங்கள் ஒரு சொற்பெருக்கால் ஒரு மாநாட்டால் ஒருவர் தானும் உண்மையை உணர்ந்து உபதேச வழி மாறி நிற்கும் பயனை அடைவதற்குச் சமயிகள் பணி புரிதல் வேண்டும்,

சமய வாழ்வில் அடையாள நிகழ்ச்சிகளுக்கு அடியோடு இடமிருக்கமாட்டாது. சரியைத் தொண்டாற்றிய குரவர்களின் வாழ்க்கையைப்பற்றியே சமயப் பிரசங்கங்கள் நடைபெறுவது வழக்கம். ஆனல் அவற்றின் பயனாக எவ்வளவுக்குத் திருத்தொண்டு நிகழ்கின்றதென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியதவசியம்.

பெரியபுராணப் பேரறிஞர்களாகிய திருத்தொண்டர்கள் உரிய குறிக்கோளை உறுதிப்பண்ணி வாழ்ந்திருக்கின்றனர். அறுபத்து மூவரையும் வழிபடும் பேற்றைத் திருக்கேதீச்சரத்திற்பெறுகின்ற சமயிகள் தூய செயல் விளையும்வண்ணம் வாழ்க்கை நெறியை வகுப்பார்களாக.

# ஆலய வழிபாடு

[ சைவப் புலவர் திரு. வ. சுப்பிரமணியம் ]

( முன்வளர்ச்சி - 2 )

இனி, அந்தக் கடவுளை வணங்குவதற்கு. எச்சென்மம் ( பிறவி ) சிறந்தது என ஆராய்ந்து பார்த்தால், மனவியற்கையிலும், சரீர அமைப்பிலும், மற்றைய வழக்க ஒழுக்கங்களிலும் மிகப்பெரியதும் வேறுபட்ட ஓரறிவுயிர் தொடங்கி; ஆறறிவுயிர் இறுதியாயுள்ள 84லட்சம் சீவராசிகளுள்: இது நன்மை, இது தீமை, எனப் பகுத்துணரும் ஆறும் அறிவு இம் மக்கட்சாதி ஒன்றிற்கே உரிய சிறப்புடையதாம், அங்ஙனம் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் தன்மையும், ஆன்மா, சரீரத்தில் இருக்கும்போது ஏற்படுமேயன்றி, இக்கூட்டை ( உடம்பை ) விட்டு ஆவி பிரிந்திடில் சிறிதும் பகுத்தறிவின் தன்மை ஏற்படமாட்டாது. அவ்விதம் ஏற்படாவென்பதற்குக் காரணம் யாதென்றால் நாம் சென்ற வருட, மாதங்களில் அநுபவித்த துன்பங்களை இப்போது நினைப்பினும் நமக்கு துன்

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

## நூலரங்கம்

### "சிதானந் யோக"

ஆசிரியர்:
ஸ்ரீ சிதானந்த யோகிகள்
நல்லை. ஆதீனம்
யாழ்ப்பாணம்.

"பற்று விடுவதற்காகப் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதும், நல்லோர்களின் சேர்க்கையை நாடுவதும் முள்ளை முள்ளால் எடுக்கும்காரியமாகவே அமைய வேண்டும்" என்று ஒரு முறை இந்தியத் தத்துவ மேதை டி. எம். பி. மகாதேவன் அவர்கள் கூறினர்.

சைவ சமயத்தின் ஆதிதத்துவமும் இதுவே எனலாம். பற்றினைப் பற்றி உடலோம்பி வாழும்போது இறைவனுக்குரிய ஆலயமாக அதை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

'உள்ளக் கமலமடி
உத்தமனுர் வேண்டுவ ,"

என்பது விபுலானந்தச் செல்வம்,

என்றுரிய "உடலைப் பேணுங்கள்; நோயுடல் கொண்டானுள்ளம் இறைவன் குடிகொள்ளும் வழியைத் தயார் செய்யாது" என்று பன்னிப் பன்னிக் கூறி யோகம் பரப்பிவரும் ஸ்ரீ தானந்தயோகி அவர்கள் அவசியப்பணியாக "சிதானந்த யோக" என்னும் நூலை வெளியிட்டுள்ளார்கள்.

இந்நூல், பத்மாசனம் தொடங்கி இல் வாழ்வினர்க்கு அத்தியாவசியமான இருபத்திரண்டு ஆசனங்களை பெரிய விளக்கப் படங்களுடன், விளக்கங்களுக்கு அருகிலேயே படங்களும் வரவேண்டுமென்ற நோக்குடன் அமைந்து காட்சி தருகிறது,

84 பக்கங்களுடன் அழகான அட்டைப் படத்துடன் கட்டுக் கோப்பாக அமைந்துள்ள இந்நூல், யோகம் பயில விரும்புவார்க்கு ஆசானகவும் மலிந்து காணப்படும் சில நோய்களைத் தீர்க்கும் வைத்தியனுகவும் விளங்குகிறது.

ஆசிரியர். உடலை நன்கு பேணி இறை தியானத்தை வளர்ப்பதே வாழ்வாங்கு வாழும் வழியெனக் கூறுகிறார்- சாகசங்கள் செய்வதோ, பிரச்சாரப் புகழைப் பெறுவதையோ நோக்கமாகக் கொள்ளாமல, நோய் நீங்கி நலம்பெறப் போதிக்கும் தம் குரு நாதரின் கட்டளையைச் சிரமேற்றுங்கிப் போதிப்பதை அடக்கமாகக் கூறும் இவர் பிராணயாமம்பற்றிக் கூறும்போது பின் வருமாறு கூறுகிறார்:

"பிராணயாமம் என்றால் மனிதன் பெரிய நினைப்பு நினைக்கிறான். ஆகாயத்தில் பறப்பது, நீரில் கிடப்பது, யாருங் காணுமல் உலகத்தில் உலாவுவது. இவைகள் நமக்கு வேண்டாம். நாம் ஆரோக்கியமாக மட்டும் வாழ்ந்தால் போதும். இல்லற வாழ்க்கைக்கு ஆண், பெண் இருவரும் முக்கியமானது போல் உடலுக்கு ஆசனம், பிராணயாமம முக்கியம். ... ... ... ... ... ... ... ... ... ... நாம் காற்று மண்டலத்தில் இருக்கிறோம். இந்தக் காற்றை வசியப்படுத்தி அதன் சக்தியை நாம் கூடுதலாகப் பயன் படுத்த வேண்டும்".

இகலோக காரியங்களில் சித்தி பெறுவதற்கு தினமும் நமது உடலிலுள்ள சுவாசம் எந்தப் பக்கத்தால் ஓடுகின்றதென அறிந்தால் நமது தினக் கடமைகள் அமைதியாக நடக்கும் என விளக்

## நல்லூர்க்கந்தன் நினைவு

சைவப்புலவர் க. சிற்றம்பலம்

குகனே வருக குறைதீர்க்கும்
குமரா வருக குன்றிலாடும்
கோவே வருக குறமாதின்
கொழுந்தே வருக தேவமகள்
கொழுநன் வருக செந்தமிழின்
தேனே வருக நலம்பொழியும்
நாதா வருக தேரேறி நல்லூர்
முருக வருக வருகவே. (1)

முருகா சரணம் முகில்வண்ணன்
மருகா சரணம் மலைமாதின்
மைந்தா சரணம் மருதமலை
மணியே சரணம் கருணைபொழி
கண்ணு சரணம் நல்லூரின்
கந்தா சரணம் வள்ளிதெய்வ
கணவா சரணம் தேரேறிவருவாய்
இறைவா சரணம் சரணமே (2)

## சைவத் தியாகிகள்

(1-ஆம் பக்க வளர்ச்சி)

நம் முதாதையரால் தாபிக்கப்பட்ட கோவில்களின் உண்மை நோக்கங்கள காலகதியில் மறையப் புதிய நோக்கங்களும், வெறும் கூத்துக்களும் மலர நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். பெரும் பணம வீணை கரைகின்றது. இதனை கும்பிடச் செல்லும் மக்கள் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனரே. எவ்வளவு தவறு, இதைநீக்க ஆலயங்களின் மத்தியில் அறநிலையங்களும், அவற்றில் தியாகிகள் உருவாகுதலும் அவசியமல்லவா.

"வயிற்றுக்குச் சோறிடவேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்விதந்தே இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்"

என்ற பாரதி வாக்குப்படி கல்விபயிற்றி அதைத் தொடர்ந்து சமய ஞான கருமத்தியாகிகளாய் சைவ - தமிழ்த தொண்டர்களை உற்பத்தி செய்யவேண்டும். இவர்களைப் பயிற்றும் ஒரு மத்திய தாபனம் வேண்டும். தோன்றும் இந்த நோக்குடைய தாபனங்களை ஒரே சபையின் குறிக்கோளில் இயங்கச் செய்து சைவ - தமிழத் தொண்டர்களை உருவாக்குவது நம்முக்கிய கடமையுள் ஒன்றல்லவா? வாழ்வு வேறு, சமயியாதல் வேறு என்று கருதும் இழிநிலை தவிர்க்கப்பட வேண்டும்.

சைவத் தியாகிகளும், சைவப்பிரசாரகர்களும், தமிழறிஞர்களும், தொண்டர்களும் இந்த ஒரே தலைமையில் தம் கருத்துக்களைக் கூறுவதுடன பொது அமைப்புளடங்கிய தியாக பீடங்களில் இருந்து வாழும் தொண்டர்கள் - சந்நியாசிகள் புறப்பட்டுச் சமூகத்தை வழி நடாத்த வேண்டும. இந்த நடைமுறைகளைப் பௌத்த, கிறீத்துவ தாபனங்களில் நேராகக் கண்டும் சைவர்களாகிய நாம் வாழாவிருக்கின்றோமே.

எச்சமயத்தவரும் வந்திறைஞ்சும், சென்னியில் வைத்து இராசாங்கத்தில் அமர்ந்த தூய வைதிக சைவக் காப்பாளர்கள் தயவுசெய்து ஒன்றிய கருத்துக் களஞ்சியத்தை உற்பத்திசெய்ய முன்வரவேண்டும் இப்படிக் கருத்துத் தெரிவிக்கும் பொழுது இவரார் இதுசெய்ய என்று எம்மைத தள்ளிவிடாதீர்கள். இங்கு தெளிவுபடுத்தப்படும் கருத்தைச் சொற்படுத்த விழைபவர்களுள் நாமும் ஒருவன் என்ற ரீதியில சேர்த்துக் கொள்ளுங்கள். அதற்காக முயன்று கொண்டிருப்பவருள முயன்று கஷ்டங்களை அனுபவிப்பவருள நாமும் ஒருவர் என்ற ரீதியில இக்கருத்தை நம்மிடையே சமர்ப்பிக்கின்றோம். அரசியல் ரீதியாக ஒன்றுபட வேண்டும் என்று காதிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சமய ரீதியாகவும் ஒன்றிச் சேவை செய்ய வேண்டும் என்பது வெளிப்படையானது (வளரும்)

## நல்லைக் கந்தன் விசேட திருவிழாக்கள்

| | | |
|---|---|---|
| 23-8-76 | திங்கள் | சப்பரம் |
| 24-8-76 | செவ்வாய் | தேர் |
| 25-8-76 | புதன் | தீர்த்தம் |
| 26-8-76 | வியாழன் | பூங்காவனம |

கிச் சாதாரண பக்தர்களுக்கு நன்கு உதவியுள்ளார்.

இந்நூல் யாவர்க்கும் பயனூட்டும் வகையில, இலகு தமிழில, மயக்கந்தரும சொற்களின்றிப் படைக்கப்பட்டிருத்தல் யோகாபிமானியின திறமையை போக்கும்.

இந்நூலின் பல்வகைச் சிறப்புகளுள் தமிழறியாதாரும் பயிலும் வண்ணம ஆங்கில மொழியிலும் விளக்கங்கள் அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும்.

" இச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி யின்பம் பெறும் பொருட்டேயாம்". — நாவலர்.

( வாரணன் )

## மண்டலாபிடேகம்

கண்டு களிக்க மாந்தைப் பதி நோக்குகின்றனர் அடியார்கள்

ஆனித் திங்கள் அத்த நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் மகிமை பெற்றவிழா ஆவணித் திங்கள் திருவாதிரைச் சிறப்பு நாளில் ஏகாதசி எழிலான திதியில் (21-8-1976) மண்டலாபிஷேகப் பூர்த்தி இனிதெய்தத் திருவருள் கமாலிந்திருக்கின்றது.

திருக்கேதீச்சரத் தேவத்தானம் ஈழத்தின் ஈடேற்றத் தீபமாக ஒளி பரப்பிக் கொண்டிருப்பதும் அடியார்கள் என்றும் கேதீசரநாதனையும் கௌரி நாயகியையும் எண்ணியவண்ணம் இருப்பதும் ஆகிய பெரும் பயன் விளைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

(2 ஆம் பக்கத்து வளர்ச்சி)

கம் அதிகரிக்கிறது. அப்படியிருக்க, ஆன்மாவினது கடந்த சென்மங்களில் அனுபவித்த துன்பங்களை மறவாது ஞாபகத்தில் வைக்கில் துக்கம் பெரிதுமதிகரித்து, சகலத்தையும் வெறுத்து, உற்சாகத்தையும் இழக்க நேரிடும் இங்ஙனம் நிகழாதிருக்க வேண்டியே கடவுள், ஆன்மா உடலைப் பிரிந்தவுடன் அது அனுபவித்த சுகதுக்கங்களை மறக்கச் செய்கிறார் இதுவரையும் சொல்லி வந்ததில் இம்மானிட சென்மமே கடவுளைத் தெரிந்துகொள்ள இன்றியமையாத சாதனமாகின்றது ஆன்மா உடலை விட்டுப் பிரிவதற்கு முந்தியே - கடவுளை வணங்கி அவருடைய அருளைப் பெறுதல் அவசியமாகின்றது கடவுளை எப்படித் தெரிந்து கொள்ளுகிறது? அவர் எப்போது தோன்றுவார்? என்றால்; விறகின்கண் மறைந்து கிடந்த தீ சவ் விறகினை ஒன்றோடொன்று தேய்த்துக் கடைந்தவழி அதில் தோன்றி நின்றது போலவும், பாலின்கண் மறைந்துள்ள நிறைந்த நெய், அதனைக் காய்ச்சிக் கடைந்தவழி அதில் வெளிப்பட்டு நின்றது போலவும், எள்ளிலுள்ள எண்ணெய் செக்கிலிட்டு ஆட்டும் பொழுது வெளிப்பட்டு நின்றது போலவும் - எங்குப்பரந்து வியாபித்திருக்கும் ஈஸ்வரன் (சிவபெருமான்) ஆன்மாவைக் கீழரணியாகக் கொண்டு, பிரணவ உணர்ச்சியை மேலரணியாகக் கொண்டு அன்பு என்னும் கயிறுகட்டி இழுத்துக்கடைய வெளிப்பட்டுத் தோன்றி அனுக்கிரகஞ் செய்வார் இதுபற்றியே.

> விறகில் தியினன் பாலிற் படுநெய் போல்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
> உறவுக் கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
> முறுகவாங்கிக் கடைய முன்னிற்குமே

எங்கும் வியாபித்து அரூபமாய் விளங்கும் கடவுளை ஓரிடத்தில் ஆவாகனஞ் செய்து வணங்குதல் பொருந்துமோ என்றால், பொருந்தும்.

நாம் நம்முடைய உயிர்த் தோழரொருவரை நேரிற் காணாவிடினும் அவருடைய பிரதிவிம்பமாகிய ஓர் படத்தைக்கண்டால், நாம் அவரை நேரிற் காணில் நமக்கு எவ்வளவு அன்பும் பிரியமும் ஆனந்தமும் உண்டாகுமோ, அவ்வளவு உண்டாகின்றது. அங்ஙனமே சிவனைப் பிரத்தியட்சத்தில் நம்மால் காணச் சிறிதும் முடியாதிருந்தும் அவர் சாயலைக் கண்டால் அப்பொழுதே நமக்கு ஓர் விதமான அன்பும், இன்பமும், பக்தியும் பிறக்கின்றன. இது காரணம் பற்றியே நாம் ஆலயங்களில் விக்கிரகங்களைத் தாபித்துப் பூசிப்பது என்பதை அறியவும். "ஆலயந் தொழுவது சாலவு நன்று", "கோயி லில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்னும் முதியோர் திருவாக்குகளாலும் அறியலாம்.

கடவுளுக்கு முக்கியமாக பிருதுவி, அப்பு தேயு, வாயு, ஆகாயம், சூரியன் சந்திரன், ஆன்மாவாகிய எட்டும் சரீரங்களாக விளங்குகின்றன என்று சொல்லப் பட்டிருக்கின்றது.

சகல பொருள்களிலும் ஞாயிறு மிகப் பிரகாசமானதும், அதி பரிசுத்தமானதுமாகையால், பரமான்விற்கு அதுவே பிரதான சரீரமாகக் கொள்ளப்படுகின்றது இது பற்றித்தான் இருக்கு முதலிய வேதங்களில் காயத்திரி மந்திரத்தைச் சிறப்பித்துச் சொல்லப் பட்டிருக்கிறது அம் மந்திரத்தால் சூரியனில் வீற்றிருக்கும் பரமான்மாவை உத்தேசித்தே பூசித்தல் வேண்டும். இதுபற்றியே,

> "அருக்கன் பாதம்
> நிணைகுவரந்தியில்
> அருக்கனுவான
> ரனுவல்லனே,
> இருக்கு நான் மறை
> யீசனையே தொழுங்
> கருத்தினையறியார்
> கன்மனவரே"

என்னும் திருவாக்குமெழுந்தது. மேற்சொன்ன எட்டிடங்களும் கடவுளுக்கு முக்கிய சரீரமாக விளங்குகிறது என்பது அப்பர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

"இரு நிலனாய்த், தீயாகி நீருமாகி இயமானனாகி எறியுங் காற்றுமாகி யருநிலைய திங்களாய் ஞாயிறாகி, யாகாசமாயட்ட மூர்த்தி யாகிப் பெரு நலனுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவும் தம்முருவும் தாமேயாகி, நெருநலையாயின்றாகி, நாளையாகி நிமிர் புன் சடையடிகள் நின்றவாறே" என்னுந் தமிழ் வேதத்தாலறியப் படுகின்றது

இனி, ஆலயம் - அண்டாலயம், பிண்டாலயம் என இருவகைப்படும். அண்டத்திலுள்ள சகலமும் நம்முடைய பிண்டத்திலும் அடங்கியிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அண்டமானது, இடகலை, பிங்கலை சுழிமுனையென்னும் மூன்று நாடிகளால் ஈட்டப்பட்டுருக்கின்றது இடகலை, பிங்கலை நாடிகள் முறையே இமயகிரி பர்வதச் சாரலிலும் இலங்கைத் தீவிலும் செல்லுகின்றன சுழிமுனைநாடி சிதம்பர க்ஷேத்திர வழியாகச் செல்லுகின்றது. இதேமாதிரி நம்முடைய தேகத்திலும் இடகலை பிங்கலைநாடிகள் வலது காற் பெருவிரலிலாரம்பித்து இடதுநாசி வழியாகவும், இடது கால் பெருவிரலில் ஆரம்பித்து வலது நாசி வழியாகவும் செல்லுகின்றன சுழிமுனை நாடியானது சரீரமத்தியிற் சென்று உச்சியில் ஊடுருவிச் செல்லுகின்றது.

அண்டத்தில், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல் நல்லதண்ணீர்க்கடல், உப்புக் கடல், தேன்கடல், கருப்பஞ் சாற்றுக்கடல் என்னும (சப்த சாகரங்கள்) ஏழுகடல்கள் அடக்கியிருக்கின்றன அவ்விதமே, நம்முடைய பிண்டத்தில் சுக்கிலம், இரத்தம், மச்சை, இலம்பிகை, சிறுநீர், சிலேட்டுமம், இரசம், என்னும் ஏழும் முறையே மேற்சொன்ன ஏழு கடல்களாகக் கொள்ளப்படுகின்றன. அண்டத்திலும் 1008 சிவதலங்களுள் 6 சிவதலங்கள்தான் சிறந்தன அவையாவன (1) திருவாரூர் (2 திருவானைக்கா; (3) திருக்காளத்தி; (4) திருவண்ணாமலை; (5 காசி; (6) சிதம்பரம் இந்த ஆறு க்ஷேத்திரங்களும், பிண்டமாகிய நம்முடைய சரீரங்களிலிருப்பதாக பெரியோர்களாற் சொல்லப்படுகின்றன. இவைகள் முறையே,

1 மூலாதாரத்தில் திருவாரூரும்; 2 சுவாதிட்டானத்தில் திருவானைக்காவும் 3 மணிபூரகத்தில் திருவண்ணாமலையும் 4. அநாகத்திலே சிதம்பரமும் ; 5 விசுத்தியில் திருக்காளத்தியும்; 6 ஆக்ஞையில் காசியுமாகக் கருதப் படுகின்றன.

மேற்சொன்ன ஆறு இடங்களில் உள்ள மூர்த்திகளா வார்:-

(வளரும்)

## மயிலணிக் கந்தசுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம்

சுன்னைக் சமாரசுவாமிப் புலவர் அகத்துக்கு அருகாமையிலுள்ள மயிலணிக் கந்தசுவாமி கோயில் புனரமைப்புத் திருப்பணி பூர்த்தியாகி ஆவணித் திங்கள் 11 ஆம் நாள் (27-8-1976 புனராவர்த்தன சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கின்றது

22-8-76 தொடக்கம் கிரியைகள் நடைபெற்று 27 8-7 மகா கும்பாபிஷேகமாகி அன்று மாலை திருக்கல்யாணமும திருவிழாவும் நிகழும்

புலவரின் கனிஷ்ட புத்திரன் திரு. மூத்துக்குமாரசுவாமிப்பிள்ளை தலைமையிலே திருப்பணிச் சபை அரிய சேவை ஆற்றி வருகின்றது.

## சிவானந்த குருகுலம்

[1ம் பக்க வளர்ச்சி]

சமயத்தையாவது இந்துசமயத்தையாவது ஆழமாகக்கற்றால் உலகப் பிரச்சனைகள் பலவற்றைச் சுலபமாகத் தீர்த்துவிடலாம். உங்கள் சிவானந்த குருகுலத்தின் மூலம் ஒரு சில குருமாரைப் பயிற்றுவிப்பதிலும் பார்க்க சமஸ்கிருதத்திலும் சமய அறிவிலும் கூட சிறந்த கல்விமான்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதே எனது விருப்பமாகும் சமயத்துறையில்பெரிய ஆராய்ச்சிகளைச் செய்வதோடு வெளிநாடுகளுக்கும் சென்று சமயத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டும் இவற்றுக்கு ஏற்ற வகையில் உங்கள காணியில் அமையும் கட்டிடம் பல அமைப்புகளும் மாடிகளும் கொண்டதாக அமையவேண்டும், இப்படியான ஒரு கட்டிடம் அமைக்கும் இலட்சியத்தை அரசாங்கம் நன்கு மதித்து 1977-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென ஓர் அடையாள மானியத்தைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது எனக் கூறினர்.

## தேர்த்திருவிழாவன்று சிவபூசை மாநாடு

நயினை நல்லூர் பாதயாத்திரை அன்பர்கள் சார்பில 24-8-1976 அன்று அதிகாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில சைவப் பெரியார் கொக்குவில் த. குமாரசுவாமி புலவர் அவர்கள் தலைமையில் ஒரு சிவ பூசை மாநாடு நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் பல குருக்கள்மார், சிவபூசாதுரந்தரர்கள், சிவதொண்டர்கள ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

௳

## கடையிற் சுவாமி குருவார அன்ன சத்திரம்

1-5-75 தொடக்கம் 30-4-76 வரை

வரவு செலவுக் கணக்கு

| பண வரவு: | ரூ. ச |
|---|---|
| S. மகாதேவா | 50 00 |
| இ. செல்லப்பா | 25 00 |
| துரை & Co | 25 00 |
| S நடராஜா (ரதிவோச்) | 25 00 |
| A. பாலசிங்கம் | 30 00 |
| சி தியாகராசா | 45 00 |
| A.S.சங்கரப்பிள்ளை &Bro | 25 00 |
| யாழ்மெற்றல் இன்டஸ்றீஸ் | 20 00 |
| V. M. V. நல்லநாதன் | 25 00 |
| V. குகமூர்த்தி | 10 00 |
| S V. முருகேசு | 10 00 |
| S. A. செல்லையா & Co | 10 00 |
| சு. ம. ச. | 10 00 |
| P. M. நாகரட்ணம் செட்டியார் | 10 00 |
| ஆ. நல்லதம்பி | 10 00 |
| A பேரம்பலம் | 5 00 |
| சு. தம்பிஐயா | 15 00 |
| சி. முருகேசு | 1 00 |
| கிடுகு மிகுதிப் பொருள் விற்று வரவு | 50 00 |

பொருள் உதவியோர்கள்
மில்க் வைட் தொழிற்சாலை
1 மூடை அரிசி
K. சோமசுந்தரம் சுன்னாகம்
1 மூடை அரிசி
பெரியகடை அன்பர்கள் மற்றும் பொருள தந்து உதவி புரிந்தார்கள்.

1-5-75 தொடக்கம் 30-4-76 வரை உள்ள வரவு செலவுக் கணக்கு:

| | வரவு | செலவு |
|---|---|---|
| அடியார்கள் பணம் | 351 00 | |
| பொருள்விற்று வரவு | 50 00 | |
| மின்சாரம் | | 130 00 |
| பூசைச் செலவு | | 647 70 |
| கோட்டுச் செலவு | | 440 50 |
| பந்தல் வேலி | | 254 75 |
| அன்னதானச் செலவு | | 76 40 |
| சில்லறை & பத்திரிகை | | 46 80 |
| மேலதிகச் செலவு | 1195 15 | |
| | 1596 15 | 1596 15 |

R. C. மன்மதராயன்
தனாதிகாரி
குருவார அன்னசத்திரம்
41 20-8

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் இல: சுற 12614

வல்வெட்டி 1. செல்லப்பா செல்வவினாயகம் 2. பெண் மகேஸ்வரி
எதிராக வழக்காளிகள்
வல்வெட்டி சின்னையா கிருஷ்ணபிள்ளை கைம்பெண் கண்மணி
எதிரி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் கிடைத்த விற்பனவு அதிகாரப்படியும இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம 1976-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9-ம திகதி வியாழக்கிழமை முற்பகல 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து ஏன்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை "தெலலுவை" நில. டர 12 குளி 213/32 இது 24-11-1948 -ல் உலாந்தா மேஸ்தர் வே. சிவரத்தினத்தால 538-ம இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதும குறித்த பிரிவினை வழக்கில் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி 1,2,3,4,4 என்னும துண்டுகளாக விருக்கின்றன. குறித்தபடத்தில் 2-ம நம்பர்த துண்டுக்கு நிர. 2 குளி 15 27/32 இதைச் சேர்ந்தவைகளும எல்லை கிழக்கு 1-ம,5-ம துண்டுகளாகிய எங்களுக்கும மறுபேருக்குமுரிய ஒழுங்கை வடக்கு இராசா கைம்பெண தங்கரத்தினத்திறத்தாரிய காணி மேற்கு சிதம்பரிநாதர் புதுதுவின உரிமைக்காரருக்கும மறுபேருக்குமுரிய காணி தெற்கு 3-ம துண்டாகிய தாமர் விசுவலிங்கத்தின உரிமைக்காரருக்குரிய காணி இவ்வெல்லைக்குட்பட்ட நிலம கொட்டில்கள் வீடுகள முழுவதும் "O" அடையாளமிடப்பட்ட கிணற்றிலும அதைச் சேர்ந்த வைகளிலும் 1-ம நம்பர்த்துண்டிலுள்ள நிலத்திலும பங்கும் அதற்குள் நிற்கும தென்னைகள கமுகுகள முழுவதும்.

| | | |
|---|---|---|
| தீரட்சித்திகதி வரையுமுள்ள முதலும் வட்டியும் | ரூ. | 6400.00 |
| ரூபா 4000/ க்கு 25-2-74 தொடக்கம 7-8-74 வரை 12 வீத வட்டி | ரூ. | 220.00 |
| மொத்தம் | ரூ. | 6620.00 |
| ரூபா 6620/-க்கு 7-8-74 தொடக்கம் 7-8-75 வரை 5 வீத வட்டி | ரூ. | 331.00 |
| | ரூ. | 6951.00 |
| ரூபா 6620/-க்கு 7-8-75 தொடக்கம் 7-10-75 வரை 5 வீத வட்டி | ரூ. | 55.00 |
| | ரூ. | 7006.00 |
| 1-10-75-ல் எதிரி கோட்டில் கட்டிய | ரூ. | 1000.00 |
| | ரூ. | 6006.00 |
| ரூபா 6006/-க்கு 7-10-75 தொடக்கம் 7-7-76 வரை 5 வீத வட்டி | ரூ. | 202.00 |
| | ரூ. | 6208.00 |

ரூபா 6208.00 க்கு 7-7-76 தொடக்கம் 26-8-76 வரை 5வீத வட்டி,

"உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை,
பருத்தித்துறை,
13-7-76
29, 16-7

R. S. இராமநாதன் J. P
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales, Valuer and Auctioneer,

நீரைத் தேக்கி நிலத்தை வளஞ்செய்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

வேதமோ(டு) ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்,
ஓதுஞ் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன,
நாத னுரையிவை, நாடில் இரண் டந்தம
பேதம தென்பர், பெரியோர்க்(கு) அபேதமே.

Both the Vedas and the Agamas are true Revelation, couched in general and specific terms, respectively. Both are the word of the Lord. (Superficial researchmen) say that the conclusions of the two differ, but the wise see no such difference.

Hindu Organ

FRIDAY, AUGUST 20, 1976

## Here is the Hour

THE heroes who assembled in a glorious setting at the Summit Conference of the Non-Aligned have covered themselves with glory. Our lovely little Isle has won a coveted prize — the leadership of the Third World for a period of three years. The occasion is, therefore, necessarily and factually great.

Here is the hour for every individual member of the Non-aligned Union to make sure whether everything is alright in the affairs of its home. Charity, they specifically say, begins at home. Hence the charitable convention of the call for calm in the world as a whole must lead to the presumption that no non-aligned nation has an Augean Stables to be cleansed.

Sri Lanka, tiny it may be, yet has assumed a himalayan responsibility of leading the several members of the Third World to the ideal of non-interference, non-commitment and non-aggression. The task is really great. The confidence for the fulfilment of this duty must spring from harmony within. Here is the hour for our country to rise to the occasion and set the example for contentment, harmony and goodwill among its people.

And now is the chance for Sri Lanka to make her people feel that they really enjoy genuine freedom. Redress of grievances inland must precede the assuming of responsibility outside the frontiers of a country. That there should be respect for fundamental freedoms, that the integrity of a nation depends on the measure of the contentment of its people — these alone can bring about harmony which must certainly be an integral feature of the ideal of a country.

The Orient must soon come into its own and regain the glory of the forgotten past. Lanka, the pearl of the orient, now in a happy presiding position, has, therefore, to see that at home harmony and goodwill reign. Here is the hour.

## Veteran Teacher Retires

The article by Mr. S. N. Kandiah under the captain "A Veteran Teacher Retires" relating to Brahma Sri K. Balasundarakurukkal Avergal, of Maviddapuram, scholar and scion of one of the most illustrious Brahmin families of Sri Lanka, is very information and welcome. We pray humbly to our deities to preserve our respected Kurukal Aiyah Avergal for many long services of fruitful service in increasing measure to our religion, our culture and our people — His scholarship, his earnestness, experience and family connection are national assets. Let us, the public, make the fullest use of his talents and personality, let us call upon him to shoulder new responsibilities and new avenues of service with God's Grace.

S. SIVASUBRAMANIAM
Life Member, Jaffna Saiva Paripalana Sabha
and
Attorney-at-Law

## Coomaraswamy: A Portrait of Two Worlds

BY S. DURAI RAJA SINGAM

To be described as "God's image carved in sandal-wood," or having "the appearance of a distinguished eagle," may on first thought seem to be incompatible. But if you allow your thoughts to range, you will realize that the image of God in His many manifestations over the centuries to myriads of poets may not be unlike the awesome visage of a noble eagle, spreading his great wings over the mountaintops of the world.

Thus at one time and another and by different writers has Ananda Kentish Coomaraswamy been described. The first description is attributed to a fellow Ceylonese, C. W. Chelappah. Coomaraswamy spent a brief period of time in Sri Lanka, and it was during that time during his student day, that Chellappah had met him. Later during the thirties as a well-known journalist and editor in Malaya, his early recollections of Coomaraswamy prompted this word picture.

It was an American who coined the second description, and undoubtedly this unidentified describer intimated moral and mental strength as well as the physical agility of that great bird to the spiritual flights of Dr. Coomaraswamy.

During the early years of this century in England, there was as there is today a vigorous back-to-the-land movement. C. R. Ashbee, an architect, designer, and social reformer in the English Arts and Crafts Movement, founded a quasi-Socialist workshop called the Guild of Handicraft. He located it in Chipping Campden, a small town in Gloucestershire, far from the landscapes ravaged by the Industrial Revolution, and rich in English architectural and cultural examples dating back many centuries.

In 1907, Coomaraswamy returning from a three-month tour of India, settled in with the artists and idealists forming this colony. He purchased the Norman Chapel at Broad Campden and introduced to it many well-chosen examples of oriental workmanship as well as of the art being produced there.

It was at this time that the friendship grew between Dr. Coomaraswamy and the Ashbees, and Janet Ashbee wrote in her journal:

> (Coomaraswamy was) tall and lanky and rather graceful-pale olive skin and long broad hands—small very deep set dark eyes and ashag of soft thick black hair ... his nature seems to me singularly sweet—especially in its entire unworldliness — in the real-idealism they put into their life and the total disregard for convention in its bad sense, including Mrs Grundy. Both of them live in their enchanted chapel, which glows rose-colour with linen and Morris handings and oriental crimsons - like two does, creatures that you cannot gossip with, and that yet have something more human about them than the most ordinary of us.

One of Coomaraswamy's friends of this same period Philip Mairet, who worked as a draughtsman for Ashbee and later supervised the Essex House Press for Coomaraswamy, describes his colleague during the years he knew Coomaraswamy intimately —1905 to 1917:

> Ananda Kentish Coomaraswamy was of striking appearance; very tall and dark with the olive complexion of his Eurasian ancestry, a shock of jet black hair, a small moustache and a very little beard in the middle of the chin. There was something leisurely, almost languid about the habitual movements of his long limbs and well shaped hands, though he could deploy them briskly enough, at tennis or hockey, for example; and his demeanour, normally somewhat alcof and meditative, never lacked decision; it occasionally revealed the under-currents of a passionate nature. His conversation, though of no special charm or eloquence, was original, often surprising, always gave one the impression of profound thought.

Rathindranath Tagore, son of the poet, Rabindranath Tagore, recalls the picturesque figure of Ananda thus:

> The picturesque figure of Ananda Coomaraswamy prominent in most social gatherings in London during this period, added to the charm of the artistic—I would not say Bohemian—life of the city. He was much in demand for giving talks—and he could talk fluently and impressively on any subject dealing with Art; but it was not so much his erudition as his tall and handsome appearance that made him attractive

Dr. Jacques de Marquette, of California, records the following impression of Coomarasamy at work in the Boston Museum of Fine Arts:

> While I was expecting a sparse and slender intellectual like those I had met in Bengal and in Ceylon, here was a towering personality whose olympian sovereignty was even more impressive than that of the great patrician Tagore. My second impression .... was that of a great worker whose many books and articles were only the outer expression of a vast store of knowledge extending far beyond that part of it which had been made public.

And of a visit to Coomaraswamy's home, we have this graphic account from Rudolf Arnheim:

> It must be about thirty years ago that I was privileged to visit Ananda Coomaraswam's home in the Boston area. I do not possess a storyteller's memory and therefore I no longer recall much of what I saw and heard. But I remember the tall, erect figure, the unexpected y bold eagle's nose in his sharply modeled face — a memory mage not contaminated by any photograph.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 459 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday August 20, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org